**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண். 12/2021**

வாதி தரப்பு சாட்சி – 2 சங்கிலிபிள்ளை திரு.M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 15.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். இவ்வழக்கு எப்போது தாக்கல் செய்யப்பட்டது என்ற விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் எந்த சர்வே எண்ணிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனக்கு சொந்த நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. எனது மனைவியின் நிலத்தின் பட்டா மற்றும் சர்வே எண்கள் தெரியுமா என்றால் தெரியாது.

2. எனது மனைவியின் நிலத்தின் பட்டா மற்றும் சர்வே எண்கள் எனக்கு தெரியாத போது மற்ற நிலங்களின் சர்வே எண் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். வாதிகள் யார் யாருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனது நண்பர் ஆவார். எனக்கு வழக்கு பற்றிய விவரங்கள் தெரியாது என்றும், வாதி எனக்கு வேண்டியவர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**